**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-05-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-05-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-06-01 | 2022-06-02 | 2022-06-03 | 2022-06-04 | 2022-06-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 39.0 | 39.0 | 39.0 | 39.0 | 39.0 |
| டிமின் (° C) | 29.0 | 29.0 | 29.0 | 29.0 | 30.0 |
| RH I (%) | 65 | 65 | 65 | 65 | 65 |
| RH II (%) | 45 | 45 | 45 | 45 | 45 |
| காற்றின் வேகம் (கிமீ) | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 200 | 270 | 200 | 200 | 230 |
| மேகக்கணி (ஆக்டா) | 3 | 3 | 4 | 4 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த மூன்று நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்ப நிலை 39.0°C , குறைந்தபட்ச வெப்ப நிலை 29.0°C - 30.0°C இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் . காற்றின் வேகம் மணிக்கு 10 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஜூன் 05 முதல் ஜூன் 11 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பானது மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

எதிர்பார்க்கும் மழையை பயன்படுத்தி நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் காய்கறிகள் ,தென்னை பயிர் செய்ய நிலம் தயார் செய்ய இதுவே ஏற்ற தரும் .

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| அரிசி | எதிர்பார்க்கும் மழை மற்றும் கடந்த வாரத்தில் பெய்த மழையை பயன்படுத்தி குறுவை பருவத்திற்கு நெல் நாற்றங்கால் தயார் செய்யவும். விதைப்பினை மழைமுடியும் வரை தள்ளி போடவும் . குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்கள் .ஆடுதுறை 36, ஆடுதுறை 45,ஆடுதுறை 43,ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும். |
| அரிசி | குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நெல் பயிரில் நுண்ணுயிர் உரங்கள் இடுதல் நல்ல பயனை அளிக்கும் நெல் நடவு நட்ட மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் ஒரு ஹெக்டேருக்கு 250 கிலோ என்ற அளவில் அசோலாவை பரவலாக தூவி நெற்பயிருடன் வளரவிட வேண்டும். அசோலா வளர்ச்சியடைந்த நிலையில், களை எடுக்கும் தருணத்தில் காலால் மண்ணிற்குள் மிதித்து விடுதல் வேண்டும். மேலும் 10 கிலோ நீலப்பச்சை பாசியின் விதையை நடவு செய்த 10-ம் நாளில் தூவி சீரான அளவு தண்ணீர்ணீகட்டி வளர்த்திட வேண்டும். |
| சோளம் | தற்போது மக்காசோளம் நடவு செய்துள்ள விவசாயிகள் 1 ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டம் அல்லது 10 கிலோஸிங்க்சல்பேட் உரத்தினை கொடுப்பதன் மூலம் நுண்ணூட்டசத்து குறைபாட்டை நிவர்த்திசெய்யலாம். மேலும் மக்கிய தொழு உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 2கிலோ அசோஸ்பைரில்லம் 2 கிலோ பாஸ்போபாக்டீரியாவை கலந்து இடவேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | காற்றின் வேகம் 10 கீ.மீ /மணி அளவில் இருக்க வாய்ப்புள்ளதால் புதிதாக நடவு செய்யப்பட்ட தோட்டக்கலை பயிர் மரங்களுக்கு கம்புகாள் உண்று அளிக்கவும் . |
| தக்காளி | தக்காளி நாற்றங்கால் அமைக்க இதுவே உகந்த நேரம். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும் . |
| தேங்காய் | தென்னையில் ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகு நுனி வளைந்த கம்பி மூலம் காண்டாமிருக வண்டினை சேகரித்து அளிக்கவும் .ஒரு மரத்திற்கு மூன்று நாப் தலின் உருண்டையுடன் 100 கிராம் மணல் கலந்து மரத்தின் கொடைப்பகுதியில் வைத்து கட்டுப்படுத்தலாம் . |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளை தாக்கும் துள்ளுமாரி நோய் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும். இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும். பருவமழைக்கு முன் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கோடை மழையின் தாக்கத்தால் தற்போது மேய்ச்சலுக்கு ஏதுவாக பச்சையாம் தென்படுகிறது . இது அடுத்த ஒரு வாரம் முதல் 10 நாட்கள் வரை தொடர்ந்து காணப்படும் .இது அதிகபட்சமாக கறவை மாடு மற்றும் இதர கால்நடைகளுக்கு நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ளுமாறு விவசாயிகளிடம் கேட்டுகொள்ளப்படுகிறது. |